ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2249/49 - 2021 ඔක්තෝබර් මස 15 වැනි සිකුරාදා - 2021.10.15

*2249/49 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

***சனாதிபதியின் பணிப்புரை***

*இலங்கை அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்வண்ணம் பசுமை விவசாயம் பற்றிய சனாதிபதி செயலணியொன்றைத் தாபித்தல்.*

1. திரு.விஜித் வெலிகல
   தலைவர், வயில்ட் ஹொலிடேஸ் (தனியார்) கம்பனி

2. திரு. லலித் செனெவிரத்ன

3. திரு. எஸ். கே. பீ. கசுன் தாரக்க அமல்
   பணிப்பாளர், உயிரின உற்பத்தி பசுமை தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம்

4. திரு. மாலிந்த செனெவிரத்ன
   பணிப்பாளர், ஹெக்டர் கொப்பேகடுவ கமத்தொழில் அலுவல்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

5. திரு. ஆர். பீ. ரசிக்க துசித்த குமார
   காலநிலை கமத்தொழில் கூட்டிணைப்பாளர் /வவுனியா மற்றும் மன்னார் மாவட்டம், சுற்றாடல் நேய விவசாய பயிற்சி ஆலோசகர்

1A - G 34915 — 380 (2021/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

6. கலாநிதி பீ.கே.ஜெ.காவந்திஸ்ஸ
தலைமை நிறைவேற்றுப் பணிப்பாளர்
"சியபத்த" சர்வதேச கல்வி மற்றும் பயிற்சி தாபனம் (தனியார்) கம்பனி

7. திரு. சமந்த பெர்ணாந்து
கான்கர ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனி

8. திரு. சமுதித்த குமாரசிங்க
லங்கா பயோ பேர்ட்டிலைசர்ஸ் தனியார் கம்பனி

9. திரு. அஜித் ரன்துனு
கிறீன் போர்ஸ் அக்ரிகல்ச்சர்ஸ் தனியார் கம்பனி

10. திரு. என். எம். கலீட்
லங்கா நேச்சர் பவர் தனியார் கம்பனி

11. திரு. ஷம்மி கிரிந்தே
பயோ பூட்ஸ் தனியார் கம்பனி

12. திருமதி. நிர்மலா கரவ்கொட
ஹய்சொங் ஓஎன்பி தனியார் கம்பனி

13. திரு. சமிந்த ஹெட்டிகன்கானம்கே
ஆர். கே. ஜீ. பயோகிறீன் பார்ம்

14. திரு. நிஷான் டி சில்வா
லோறன்ஸ் லிக்குவிட் பெர்டிலைசர்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள்!

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் மூலம் அபிவிருத்தியடைந்த விவசாய பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்பல், எதிர்வரும் தசாப்தத்தினுள் உள்ளூர் மற்றும் சர்வதேச நுகர்வோருக்கு நச்சுத்தன்மையற்ற விவசாய உற்பத்திகளைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பத்தை உருவாக்குதல் மற்றும் சுற்றாடல் நேய பயிரிடல்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாலும்,

மண்ணுக்கும் நீருக்கும் சேர்கின்ற இரசாயனக் கழிவுகளைக் குறைத்து, வாழ்வாதார வழிகளின் மூலமாக சுற்றாடல் நேய ஆரோக்கியமான பசுமை விவசாயத்தை உருவாக்குதல் அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாக இருக்கின்றமையினாலும்,

நவீன தொழில்நுட்ப உபாயங்களைப் பயன்படுத்தி, சுற்றாடல் நேய மற்றும் சேதன விவசாயத்தை மேற்கொள்வதன் மூலம் நிலைபேறான பசுமை விவசாயத்தை நோக்கிப் பயணிப்பதன் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக நன்மைகளைப் பெறக் கூடிய இயலுமை தொடர்பாகக் கவனம் செலுத்துகின்றமையாலும்,

ஆராய்ச்சி மற்றும் புதிய உற்பத்திகள் மூலம் கேடு விளைவிக்கும் விவசாய இரசாயனப் பொருட்களைக் குறைப்பதற்கு மற்றும் சுற்றாடல் நேய உள்ளூர் சூழல் நிலைமைகளுக்குப் பொருத்தமான வகையில் சேதன உர உற்பத்திக்குத் தேவையான ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டிய தேவைகளை கருத்திற் கொண்டும்,

1. திரு.விஜித் வெலிகல
தலைவர், வயில்ட் ஹொலிடேஸ் (தனியார்) கம்பனி

2. திரு. லலித் செனெவிரத்ன

3. திரு. எஸ். கே. பீ. கசுன் தாரக்க அமல்
பணிப்பாளர், உயிரின உற்பத்தி பசுமை தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம்

4. திரு. மாலிந்த செனெவிரத்ன
பணிப்பாளர், ஹெக்டர் கொப்பேகடுவ கமத்தொழில் அலுவல்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

5. திரு. ஆர். பீ. ரசிக்க துசித்த குமார
காலநிலை கமத்தொழில் கூட்டிணைப்பாளர் /வவுனியா மற்றும் மன்னார் மாவட்டம், சுற்றாடல் நேய விவசாய பயிற்சி ஆலோசகர்

6. கலாநிதி பீ. கே. ஜெ. காவந்திஸ்ஸ
தலைமை நிறைவேற்றுப் பணிப்பாளர்
"சியபத்த" சர்வதேச கல்வி மற்றும் பயிற்சி தாபனம் (தனியார்) கம்பனி

7. திரு. சமந்த பெர்ணாந்து
கான்கர ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனி

8. திரு. சமுதித்த குமாரசிங்க
லங்கா பயோ பேர்ட்டிலைசர்ஸ் தனியார் கம்பனி

9. திரு. அஜித் ரன்துனு
கிறீன் போர்ஸ் அக்ரிகல்ச்சர்ஸ் தனியார் கம்பனி

10. திரு. என். எம். கலீட்
லங்கா நேச்சர் பவர் தனியார் கம்பனி

11. திரு. ஷம்மி கிரிந்தே
பயோ பூட்ஸ் தனியார் கம்பனி

12. திருமதி. நிர்மலா கரவ்கொட
ஹய்சொங் ஔன்பி தனியார் கம்பனி

13. திரு. சமிந்த ஹெட்டிகன்கானம்கே
ஆர். கே. ஜீ. பயோகிறீன் பார்ம்

14. திரு. நிஷான் டி சில்வா
லோறன்ஸ் லிக்குவிட் பெர்டிலைசர்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும்கொண்டு, மேற்சொல்லப்பட்ட உங்களை பசுமை விவசாயம் பற்றிய சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செயற்படுத்துவதற்காக இத்தால் நியமிக்கின்றேன்.

1. பசுமை விவசாயத்தை நிலைபேறான வகையில் பேணுவதற்காக முறையான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,
2. பல்வேறுபட்ட பயிர்களுக்குத் தேவையான சேதன உரத்தை அடையாளங்காணல், மற்றும் குறித்த உர உற்பத்திகளை மேம்படுத்தல்,
3. கிருமிநாசினி மற்றும் களைநாசினி உற்பத்திகளை உள்ளூரில் உற்பத்தி செய்தல்,
4. உள்ளூர் உற்பத்திகள் மூலம் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது ஏற்படக் கூடிய பற்றாக்குறைகளை உயர்ந்த தரங்களுடன் கூடிய மற்றும் இலங்கைத் தரநியம கட்டளைகள் நிறுவனத்தின் அங்கீகாரத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் இறக்குமதி செய்யும் பொறிமுறை மற்றும் கண்காணிப்புச் செயற்பாடுகளை இனங்காணுதல்,
5. சேதன உணவு உற்பத்தி மற்றும் நுகர்வின் சுகாதாரம், சமூக மற்றும் பொருளாதார நன்மைகளை மக்கள் மயப்படுத்தும் தொடர்பாடல் நடவடிக்கைகளை பிரசித்தப்படுத்தல்,
6. இச்செயல் முறைக்காக அரச சேவையின் முனைப்பான பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் களமட்டத்தில் சேதன விவசாய விரிவாக்கல் சேவைகளை வியாபித்தல்,

மேலும் திரு. விஜித் வெலிகல அவர்களை மேற்போந்த செயலணியின் தலைவராக நியமிக்கின்றேன்.

சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் திரு. வர்னன் பெரேரா அவர்களை மேற்போந்த செயலணியின் செயலாளராக நியமிக்கின்றேன்.

மேலும் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான செயலணி மற்றும் காலநிலை மாற்றங்களுக்காக நிலைபேறான தீர்வுகளுடன் கூடிய பசுமை இலங்கையை உருவாக்கும் சனாதிபதி செயலணியுடன் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டுமென மேற்படி செயலணிக்கு பணிக்கின்றேன்.

மேலும் இங்கு ஒப்படைக்கப்படும் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான விதத்தில் ஆராய்ந்து பார்ப்பதற்கு மற்றும் ஆலோசனை வழங்குவதற்கும் மேற்படி சனாதிபதி செயலணிக்கு நான் இத்தால் அதிகாரம் வழங்குகின்றேன்.

மேலும் மேற்குறிப்பிடப்பட்ட செயலணியின் அங்கத்தவர்களான தாங்கள் குறைந்தது மாதத்திற்கொரு முறை எனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இத்தால் பணிக்கின்றேன்.

மேலும், குறித்த சனாதிபதி செயலணியிடமிருந்து ஆலோசனைகள் வழங்கப்படக் கூடிய இல்லாவிடின் சேவை வழங்குவதற்காக ஒத்துழைப்புக்களை நாடக் கூடிய அனைத்து அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனையவர்களுக்கு அப் பணிகள் தொடர்பாக சரியான வகையில் பின்பற்றக் கூடிய குறித்த ஆலோசனைகளுக்கமைய செயற்பட வேண்டுமெனவும், வழங்கப்பட வேண்டிய அனைத்து ஒத்துழைப்புக்களையும், வழங்க வேண்டுமெனவும் அனைத்து தகவல்களையும் வழங்க வேண்டுமென இத்தால் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் பணிக்கின்றேன்.

மேலும் ஏதேனுமொரு அரச ஊழியர் அல்லது ஏதேனுமொரு அமைச்சு, அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனங்கள், அல்லது அவ்வகையான நிறுவனங்களின் உத்தியோகத்தரொருவரினால் மேற்குறிப்பிட்ட செயலணியால் ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தாமதிக்கும் மற்றும் தவிர்க்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் எனக்கு அறிக்கையிடுமாறும் மேற்குறிப்பிட்ட செயலணிக்கு இத்தால் பணிக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.